# மாகாணக் கல்வித் திணைக்களம் வடக்குமாகாணம்

## மாதிரிப்பரீட்சை - 2020

நாடகமும் அரங்கியலும் II | 58-T-II | புள்ளித்திட்டம்

### பகுதி I

| | | | |
|---|---|---|---|
| 01) 2 | 11) 1 | 21) 2 | 31) 2 |
| 02) 3 | 12) 3 | 22) 4 | 32) 4 |
| 03) 5 | 13) 2 | 23) 3 | 33) 5 |
| 04) 3 | 14) 2 | 24) 5 | 34) 3 |
| 05) 4 | 15) 3 | 25) 2 | 35) 2 |
| 06) 3 | 16) 5 | 26) 4 | 36) 2 |
| 07) 2 | 17) 2 | 27) 4 | 37) 4 |
| 08) 3 | 18) 5 | 28) 5 | 38) 4 |
| 09) 3 | 19) 4 | 29) 3 | 39) 3 |
| 10) 2 | 20) 5 | 30) 4 | 40) 3 |

### பகுதி II

**01.**

1. தனி மனிதனிற்கும் இறை நியதிக்கும் (விதி) இடையிலான போராட்டம் என்பதை குறிப்பிட்டு

ஈடிப்பஸ் - ஈடிப்பஸ்

ஈடிப்பஸ் - தெய்ரீசியஸ்

ஈடிப்பஸ் - கோரஸ்

ஈடிப்பஸ் - ஜொகஸ்ரா

ஈடிப்பஸ் - கிரயோன் ஆகிய பாத்திரங்களுக்கிடையில் முரண்பட்டுக் கொள்ளும் விதம் விளக்கப்பட வேண்டும்.

2. - ஈடிப்பஸ் மக்களுக்கு உதவ விரும்புகிறான் ஆனால் விதி / இறை சித்தம் மனித உருவிலே தொழிற்படுகிறது. இறுதியில் விதியை ஏற்கிறான்.

- மனிதன் விதியின் பால் தன்னை அர்ப்பணித்து விட வேண்டும். விதியைத் தவிர்த்தால் சிக்கலில் மாட்டிக் கொள்ள நேரிடும். தெய்வங்களுக்கு தீங்கு செய்யாதிருத்தல் வேண்டும்.

- ஈடிப்பஸ் நடிகரின் பாவங்களை தன்மீது ஏற்றுத் தண்டனைகளாக்கி மற்றையோருக்கு மீட்பை அளிக்கின்றான். விதியால் பலிப் பொருள் ஆகிறான் என்ற விடயங்கள் உள்ளடக்கி / ஈடிப்பஸ் நாடக கரு வெளிப்படும் வகையில் விளக்கியிருத்தல் வேண்டும்.

3. எழுத்துருப் பகுப்பாய்வு, பாத்திரத் தெரிவு, ஒத்திகைகள், ஆற்றுகை என்பனவற்றுள் அடங்கும் விடயங்கள் விளக்கியிருத்தல் வேண்டும்.

**02.** 1. இல்லறவாழ்வில் நிலவும் புரிந்துணர்வின்மை / நோராவின் சிந்தனைப் போக்கிற்கும், ஹெல்மரின் சிந்தனைப் போக்கிற்குமிடையிலான புரிந்துணர்வின்மையான வெளிப்படும் சந்தர்ப்பங்கள் சுட்டிக்காட்டப்பட வேண்டும்.

உ + ம் நோறா மக்ரூன் சாப்பிடும் பழக்கம் உள்ளவள் என ஹெல்மர் அறிந்திருந்தும் அதனை நோறவிடம் கேட்டல் என்பது புரிந்துணர்வின்மையும் அடையாளமாகக் காணப்படுகிறது.

2. யதார்த்த வாதப் பண்புகளான.

- நிலைமையும் பாத்திரமும் நன்கு விளக்கப் பெறுதல்.
- எதிர்கால நிகழ்விற்குக் கவனமாக ஆயத்தமாதல்.
- எதிர்பாராத ஆனால் காரணகாரியத் தொடர்புடைய பின்னடைவுகள்.
- தொடர்ச்சியானதும் உயர்ந்து செல்வதுமான என்ன நடக்குமோ என்ற அங்கலாய்ப்பு நிலை.
- இவற்றுக்குச் சார்பாக நின்று உதவும் காட்சி விதானிப்பு.
- காரண காரியத் தொடர்பூடாக வருவதும் நம்பகத் தன்மை உடையதுமான முடிவு.
- சொல்லாடலின் தன்மை.
- சந்ததிக் கூர்ப்பு ……. போன்ற விடயங்கள் குறிப்பிட்டு விளக்கப்பட வேண்டும்.

3.எளிமையான தளபாடங்கள் கொண்ட ஒரு வசதியான அறை பின் சுவரில் இரண்டு கதவுகள் உள்ளன, இரு கதவுகளுக்குமிடையில் பியானோ வைக்கப்பட்டுள்ளது,இடது சுவரிலும் கதவு ஒன்றும் யன்னலும் காணப்படுகின்றது, யன்னலருகே வட்ட மேசை ஒன்றும் கதிரைகளும் வைக்கப்பட்டுள்ளன, வலது சுவரிலும் கதவு ஒன்று காணப்படுகின்றது. கணப்படுப்பும் உள்ளது. அதனருகே கதிரைகள் உள்ளன, கதவுக்கும் கணப்படுப்புக்குமிடையில் சிறிய மேசையும் கதிரைகளும் காணப்படுகின்றது. காட்சிப் பெட்டகம் ஒன்றும் புத்தக தட்டென்றும் காணப்படுகின்றது.தரையில் கம்பளம் விரிக்கப்பட்டுள்ளது. மேற்படி அமைப்பினைக் கருத்திற்கெண்டு வரையப்பட்டிருக்க வேண்டும்.



03.

1.

- புராண இதிகாச கதைத் தெரிவு.
- வடமோடிக்குரிய ஆட்டம்.
- வடமோடிக்குரிய பாடல்.
- காப்பு பாடல்.
- மங்களம் பாடுதல்.
- தரு, மறுதரு, சபைக்கவி, விருத்தம் போன்ற பாவங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளமை.
- கட்டியக்காரன் முறை போன்றன உதாரணங்களுடன் விளக்கப்பட வேண்டும்.

2.

- ஆடல்களில் பரதநாட்டிய கலப்பு.
- பாடல்களில் கர்நாடக சங்கீத கலப்பு.
- பின்னனித் தட்டிகளின் பயன்பாடு.
- புதிய இசைக் கருவிகளின் பயன்பாடு.
- நடிப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டமை.
- பிற்பாடகர் மேடையின் ஒருபுறம் சென்றமை.
- ஒளியமைப்பு.
- நவீன வேட உடை, ஒப்பனை உத்திகள் ….. போன்ற விடயங்கள் உதாரணத்துடன் விளக்கப்பட வேண்டும்.

3. 1964 :- தமிழ்த் தேசியம் பற்றிய சிந்தனை, தன்மானம்மிக்க தமிழனாக இராவணன் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டமை.

2000, 2003 :- இன முரண்பாடு, யுத்தசூழல் யுத்த நிலைமைகள் சித்தரிக்கப்பட்டமை.

2010 :- யுத்தத்தின் பின்னரான இழப்புகளின் பின்னணி, மண்டோதரி பாத்திரத்தின் முக்கியத்துவம் என்பன விளக்கப்பட வேண்டும்.

04. ஆம்.

- நாடகத் தலைப்பு.
- நாடக வகை.
- பூர்வரங்க விதிகள்.
- வஸ்த்து, நேத்த, ரச.
- அர்த்த பிரகிருதிகள்
- அவத்தைகள்.
- சந்திகள்.
- கதைநகர்வில் மிருகங்கள் பறவைகள் பயன்பாடு.

- பிரதான சுவையாக காதல் இடம் பெறல்.
- பிரதான பொருள் ஒன்று (கணையாளி) பயன்படுத்தப்படுதல்.
- சொல்லாடலின் தன்மைகள்.
- பாத்திரவாக்க முறை.
- மங்களகராமான முடிவு எனபன குறிப்பிட்டு விளக்கப்பட வேண்டும்.

**05.** மிகப்பிரதான நிறுவனங்களான மூன்று அரங்க நிறுவனங்கள் குறிப்பிடப்பட வேண்டும்.

உ + ம்

- திருமறைக் கலாமன்றம்.
- நாடக அரங்கக் கல்லூரி.
- அவைக்காற்றுக் கலைக் கழகம்.
- நடிகர் ஒன்றியம்.
- அரங்கச் செயற்பாட்டுக் குழு.
- செயலத்திறன் அரங்க இயக்கம். போன்றவற்றில் ஏதாவது மூன்று நிறுவனங்கள் குறிப்பிட்டு அவற்றின் நாடகம் சார் பணிகள், சஞ்சிகை வெளியீடு, அரங்க முயற்சிகள், ஆற்றுகைகள், பணிகள் என்பன குறிப்பிட்டு விளக்கப்பட வேண்டும்.

**05.** சிறுகுறிப்பு ஒவ்வொன்றிலும்.

- விடயம் தொடர்பான அடிப்படை எண்ணக்கரு.
- நிகழ்த்தப்படும் முறை
- தனித்துவமாய் சிறப்பியல்புகள் என சிறுகுறிப்புக்கள் ஒவ்வொன்றும் அணுகப்பட வேண்டும்.